BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# எதிர்காலத்திற்கான அடித்தளத்தைக் கட்டமைக்க, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் 2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 10, 2023) – நேற்றைய தினம் நடந்த ஒரு சிறப்புக் கூட்டத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான இயக்க செயல்பாடு மற்றும் மூலதன முதலீடுகளுக்கான வரவுசெலவுத் திட்டத்திற்கு, ப்ராம்ப்ட்டன் நகர சபைக் குழு ஏகமனதாக ஒப்புதல் வழங்கியது.

அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் மூலதனத் திட்டப்பணிகளுக்காக $496 மில்லியன் முதலீடு, மற்றும் கையிருப்பு நிதியாக $134 மில்லியன் ஆகியவை இந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் அடங்கும். இதில் இரண்டாவது மருத்துவமனை மற்றும் ஒரு புதிய புற்றுநோய் பராமரிப்பு மையம் உட்பட வரலாற்றுச் சிறப்புமிக்க சுகாதாரப் பாதுகாப்பு முதலீடுகளுக்கான ஆதரவைக் கட்டியெழுப்புதல் மற்றும் அவற்றைத் தொடருதல் ஆகியவை இதில் இடம்பெறும்.

அங்கீகரிக்கப்பட்ட $845 மில்லியன் செயல்பாட்டு வரவுசெலவுத் திட்டமானது, நகரப் பகுதி சொத்து வரி விதிப்பு வகையில் 2.9 சதவிகிதம் அதிகரிப்புக்கு, அதாவது, குடும்பத்திற்கு சராசரியாக $177 அதிகரிப்புக்கு சமமானதாகும். பீல் பிராந்தியத்திற்கு 2.8 சதவீதமும், பள்ளி வாரியங்களுக்கு 0 சதவீதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்த சொத்து வரி அதிகரிப்பு ப்ராம்ப்ட்டனில் உள்ள சராசரி வீட்டுக் குடியிருப்புச் சொத்தில் $321க்கு சமம்.

**2023 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட சிறப்பம்சங்கள்**

*உள்கட்டமைப்புக்கான பங்களிப்புக்கள்*

- டவுண்டவுன் பகுதிக்கு புத்தூக்கம் ஊட்ட மூன்று ஆண்டுகளில் $21 மில்லியன்
- ஜாம்பவான்கள் மற்றும் முதலில் செவி சாய்ப்பவர்களுக்கென, அதற்கான இடத்துடன் கூடிய சுற்றுச்சூழல் கல்வி மையம் / விலங்குகள் தங்குமிடத்தை நிறுவ $3.5 மில்லியன்
- கலை மற்றும் கலாச்சார மையத்திற்கு $2.6 மில்லியன்

*உடல் ஆரோக்கியப் பராமரிப்பு: எங்களின் நியாயமான பங்கு*

- ப்ராம்ப்ட்டனுக்கான இரண்டாவது மருத்துவமனை மற்றும் ஒரு புதிய புற்றுநோய் பராமரிப்பு மையத்தை நிர்மாணிப்பதற்கு ஆதரவாக மருத்துவமனை தீர்வை விதிப்பினை மேற்கொண்டு தொடர்தல்

- வருடாந்திரப் பங்களிப்பாக $4.9 மில்லியன்
- புதிய டொராண்ட்டோ மெட்ரோபாலிட்டன் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளிக்கு $20 மில்லியன் உதவி

*பேருந்துப் போக்குவரத்து மற்றும் காலநிலை மாற்றம்*

- ப்ராம்ப்ட்டனின் புதிய மூன்றாவது பேருந்து போக்குவரத்து வசதியின் மின்மயமாக்கலுக்கு மற்றும் ப்ராம்ப்ட்டனின் தற்போதைய சாண்டல்வுட் (Sandalwood) போக்குவரத்து வசதியின் மின்மயமாக்கலை மறுசீரமைப்பு செய்தலுக்கு $210 மில்லியன்
- • Chinguacousy சிங்க்வாகவ்ஸி வழித்தடத்தில் ஜூம் (Züm) சேவை விரிவாக்கத்திற்கு $15.4 மில்லியன்

*சமுதாயப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு*

- 24 புதிய முழுநேர தீயணைப்பு வீரர்கள்
- சமூக பாதுகாப்பு செயல் திட்டத்தைச் சேர்ப்பிக்க $650,000 க்கும் அதிகமாக
- புதிய தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்கு $8 மில்லியன்
- போக்குவரத்தில் அமைதி ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு $1.2 மில்லியன்

*பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு*

- புதிய விளையாட்டுக் களங்களை நிர்மாணிப்பது உட்பட, ஹவ்டன் பொழுதுபோக்கு மையத்தை மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதில் $24 மில்லியன்
- கோர் மெடோஸில் இருக்கின்ற கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ் மைதானங்கள் மற்றும் கட்டிடங்களை மேம்படுத்த $9 மில்லியன்
- நகரத்தின் ஒரு மில்லியன் மரங்கள் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் நகர்ப்புற வனம் அமைப்பு மூலம் நிழல் தரும் விதானம் அமைக்கும் திட்டத்திற்கு $1.2 மில்லியன்
- நகரம் முழுவதும் ஏற்கெனவே இருக்கின்ற, மற்றும் புதிய பூங்காக்களுக்கு $13.25 மில்லியன்

*நமது சமுதாயத்தினால் உருவம் கொடுக்கப்பட்டவை*

நகரம் பல்வேறு வழிமுறைகள் மூலம் ஆண்டு முழுவதும் பின்னூட்டக் கருத்துக்களை சேகரிக்கிறது, இதுவே நகர வரவுசெலவுத் திட்டத்தை வடிவமைக்க உதவுகிறது அவையாவன:

- 311 என்ற எண்ணில் தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள் மற்றும் சமூக ஊடகங்கள்
- பிப்ரவரி 23 அன்று பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 பங்கேற்பாளர்களுடன் வணிக மெய்நிகர் வட்டமேசை மாநாடு

- பிப்ரவரி 7 அன்று 8,375 பங்கேற்பாளர்கள் மற்றும் பிப்ரவரி 25 அன்று 5,492 பங்கேற்பாளர்களுடன் பட்ஜெட் சார்ந்த டெலிபோன் டவுன் ஹால்கள்

2023 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டம் பற்றிய மேலதிக தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/budget.

**அறிஞர் கூற்றுக்கள்**

“"நமது 2023 வரவு செலவுத் திட்டமானது, வளர்ச்சிக்கான ஒரு சமநிலையான அணுகுமுறையாகும்; இதில், நமது எதிர்காலத்திற்கான உறுதியான அடித்தளத்தை அமைக்கும் அதே வேளையில், நமக்கு முன்னால் மாற்றம் செய்யக்கூடிய வாய்ப்புகளை உபயோகித்து நாங்கள் செயல்படுகிறோம். புதிய பீல் மெமோரியல் ஹாஸ்பிடல் மற்றும் புற்றுநோய் மையத்தை அமைத்தபடி நாங்கள் முன்னேறும்போது, கையிருப்பு நிதிக்கான முன்னெப்போதுமில்லாத பங்களிப்புகள், போக்குவரத்துக்கான கூடுதல் ஆதரவுகள் மற்றும் உள்ளூர் சுகாதார நிதி வகையில் வரலாறு காணாத முதலீடுகள் ஆகியவற்றைக் கொண்டு, ஆரோக்கியமான மற்றும் பிணைப்பு கொண்ட சமூகங்களை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்..”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அனைத்து குடியிருப்பாளர்களுக்கும், இது ஒரு பொறுப்பான அணுகுமுறையைக் கொண்டுவருகின்ற வரவுசெலவுத் திட்டமாகும்; GTA நகராட்சிகள் மத்தியில் நமது போட்டித்தன்மையை வலுப்படுத்தும் வரவுசெலவுத் திட்டம் இதுவே. கடந்த நான்கு ஆண்டுகளாக வரி அதிகரிப்பு ஏதுமின்றி, ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்களின் வாழ்க்கையை அளவிடுகின்ற, மற்றும் உண்மையிலேயே மேம்படுத்துகின்ற திட்டத்தை நாங்கள் தொடர்ந்து வழங்குவதை உறுதிசெய்ய நகர ஊழியர்கள் மிகவும் கடினமாக உழைத்துள்ளனர்..”

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5; துணைத்தலைவர், வரவுசெலவுத் திட்டக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகரத்தின் 2023 வரவுசெலவுத் திட்டமானது, ப்ராம்ப்ட்டனின் எதிர்காலத்திற்கான அடித்தளத்தை உருவாக்குகிறது. அனைவரையும் உள்ளடக்கிய, நவீனமயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சமூகங்களை நாங்கள் உருவாக்கி வருகிறோம்; இது உள்கட்டமைப்பு, தீத்தடுப்பு, பேருந்து போக்குவரத்து மற்றும் பல ஆண்டுகளாக குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் பல வசதிகள், எங்கள் முதலீடுகளால் அரவணைக்கப்படுகின்றன. எங்கள் வரவுசெலவுத் திட்டமிடல் உட்பட, நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் நமது மக்களே எங்கள்  இதயத்தில் உள்ளனர்; அதில் குடியிருப்பாளர்களுக்கென நாங்கள் கவனம் செலுத்தும் முதல் மூன்று விஷயங்கள்: சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் குறைந்த வரிகள்.”

- *மார்லன் கால்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி  ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca